# அரையாண்டுத் தேர்வு-2024

பதிவு எண் :

## தமிழ்

வகுப்பு : 9 மொத்த மதிப்பெண்கள் : 100

காலம் : 3.00 மணி

**அறிவுரைகள் :** ❖ மாணவர்கள் தேர்வு நேரத்தை முழுமையாகப் பயன்படுத்தி விடைகளை எழுத்துப்பிழைகள் மற்றும் அடித்தல் திருத்தலின்றி தெளிவாகவும், நேர்த்தியாகவும் எழுதுதல் வேண்டும்.

❖ விடைகள் பொருள் மாறாமல் மாணவர்களது சொந்த நடையில் இருத்தல் வேண்டும்.

❖ தேர்வெழுத நீலம் மற்றும் கருப்பு நிற மையினை மட்டுமேபயன்படுத்த வேண்டும்.

### பகுதி-I

15x1=15

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

1. தமிழ் விடு தூது .......... என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
   அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
   இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
2. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது ?
   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புளரி
3. பொருந்தாத இணை எது ?
   அ) ஏறுகோள்–எருதுகட்டி ஆ) திருவாரூர்–கரிக்கையூர்
   இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம்– பட்டிமண்டபம்
4. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு ..................
   அ) தேசிய திறனறித் தேர்வு ஆ) ஊரக திறனறித் தேர்வு
   இ) தேசிய திறனறி, கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி
5. மணிமேகலையின் முதல் காதை ..............
   அ) விழாவறை காதை ஆ) மலர் வனம் புக்க காதை
   இ) ஊரலர் உரைத்த காதை ஈ) பளிக்கறைப்புக்க காதை
6. வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்பட வேண்டும் – என்றவர்
   அ) அறிஞர் அண்ணா ஆ) கதே இ) பெரியார் ஈ) பாரதியார்
7. <u>பூவாது</u> காய்க்கும், <u>மலர்க்கை</u> – அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது ?
   அ) பெயரெச்சம், உவமைத் தொகை ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
   இ) வினையெச்சம், உவமை ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத் தொகை
8. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று ..................
   அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு
9. மரவேர் என்பது ..................... புணர்ச்சி
   அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்
10. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது ?
    அ) வருக்கை – இருக்கை ஆ) புள்– தாவரம் இ) அள்ளல் – சேறு ஈ) மடிவு – தொடக்கம்
11. நச்சிலைவேல் கோக்கோதை நாடு – இத்தொடரில் குறிப்பிடப்படுகின்ற நாடு .....................
    அ) பாண்டிய நாடு ஆ) சோழ நாடு
    இ) சேர நாடு ஈ) பல்லவ நாடு



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடைகீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால்திசை போயது உண்டே !

12. இப்பாடல் இடம் பெறும் நூல் எது ?
அ) சீவகசிந்தாமணி ஆ) சிலப்பதிகாரம் இ) மணிமேகலை ஈ) கம்பராமாயணம்

13. இப்பாடலின் ஆசிரியர் பெயர் ..................
அ) திருத்தக்கத் தேவர் ஆ) இளங்கோவடிகள் இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) கம்பர்

14. வருக்கை என்பதன் பொருள் ..................
அ) மாம்பழம் ஆ) வாழைப்பழம் இ) பலாப்பழம் ஈ) தேங்காய்

15. இப்பாடலில் இடம் பெறும் எதுகைச் சொற்களை எழுதுக.
அ) காய்மாண்ட, தெங்கின் ஆ) தேமாங்கனி, ஏமாங்கதம்
இ) தேமாங்கனி, சிதறி ஈ) ஏமாங்கதம், என்று

## பகுதி-II

### பிரிவு -1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**வினா எண். 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4x2=8**

16. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) நீங்கள் பேசும் மொழி திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது.
ஆ) மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலைக்கு ஊருணி என்று பெயர்.

17. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது ?

18. இசைத் தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை ?

19. கருக்கொண்ட பச்சைப்பாம்பு எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது ?

20. 'டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது ?

21. 'விடல்' – என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு -2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** **5x2=10**

22. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.
(நல்ல, பெரிய, இனிய)
அ) எல்லோருக்கும் ..................... வணக்கம்.
ஆ) அவன் ............... நண்பனாக இருக்கிறான்.

23. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.
அ) கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்.
ஆ) அணில் பழம் சாப்பிட்டது.

24. அகராதியில் காண்க.
அ) புரிசை ஆ) தாமம்

25. கலைச் சொற்களை தருக.
அ) Classical Literature ஆ) Missile



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

26. காய்க்கும் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

27. மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.

அ) கிணற்றுத் தவளை ஆ) எடுப்பார் கைப்பிள்ளை

28. பொருத்தமான உரிச் சொற்களை எழுதுக.

அ) ................ சிறந்தது ( சால, மழ)

ஆ) ............... பெரும் பொதுக்கூட்டம் ( கடி, மா)

**பகுதி-III**

**பிரிவு-1**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

29. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?

30. முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். சிறந்த வீரர்களை உருவாக்க நேதாஜி 45 இளைஞர்களை டோக்கியோ அனுப்பினார். அவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள். அதில் பயிற்சி பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கேப்டன் தாசன் ஆவார். அவர் பின்பு சுதந்திர இந்தியாவின் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றினார்.

அ) நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் முக்கிய அமைச்சர்கள் யாவர்?

ஆ) சுதந்திர இந்தியாவின் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றியவர் யார்?

இ) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு தருக.

**பிரிவு-2**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6
**34வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. அறிவையும், உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?

33. ஆண்டாளின் கனவு காட்சிகளை எழுதுக.

34. அடி பிறழாமல் எழுதுக.

அ) "காடெல்லாம் ........" எனத் தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுதுக.

**(அல்லது)**

ஆ) "சொல்அரும் சூல்பசும் ........" எனத் தொடங்கும் சீவக சிந்தாமணிப் பாடலை எழுதுக.

**பிரிவு-3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2x3=6

35. தன்வினை, பிறவினை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

36. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

37. கைபிடி, கைப்பிடி – புணர்ச்சி வகைகளை விளக்குக.

**பகுதி-IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 5x5=25

38. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது என்பதற்குத் தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

**(அல்லது)**

ஆ) இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்கவும்.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

39. அ) உங்களின் நண்பர் பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ்.இராமகிருஷ்ணனின் "கால் முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துக்களைக் கடிதமாக எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ் – தமிழ் – ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப் படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



AL - AMEEN TUITION & TUTORIAL CENTRE
PAPPIREDDIPATTI
DHARMAPURI (Dt) - 636 905.

41. நிற்க அதற்குத் தக.

என்னை மகிழச் செய்த பணிகள்.

1. இக்கட்டான நேரத்தில் தம்பிக்கு உதவியதற்காக அப்பாவிடம் பாராட்டுப் பெற்றேன்.
2. ..........................
3. ..........................
4. ..........................
5. ..........................

42. மொழி பெயர்க்க.

1. Every flower is a soul blossoming in nature / Gerard De Nerval
2. Sunset is still my favourite colour and rainbow is second - mattie stepanek
3. An early morning walk is a blessing for the whole day - Henry David Thoreau

## பிரிவு-V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3x8=24**

43. அ) இந்திய விண்வெளித்துறை பற்றிய செய்திகளை விவரிக்கவும்.

(அல்லது)

ஆ) இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரைவழி நிறுவுக.

44. அ) 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

(அல்லது)

ஆ) இசைக்கு நாடு, மொழி இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக.

45. பின்வரும் குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக.

அ) முன்னுரை – சாலை விதிகள் – விபத்திற்கான காரணங்கள் – பாதிப்புகள் – விபத்துகளைத் தடுக்கும் வழிமுறைகள் – முடிவுரை

(அல்லது)

ஆ) முன்னுரை – சிற்பங்களின் வகைகள் – பல்லவர் காலச் சிற்பங்கள் – பாண்டியர் காலச் சிற்பங்கள் – சோழர் காலச் சிற்பங்கள் – நாயக்கர் காலச் சிற்பங்கள் – பௌத்த சமண சிற்பங்கள் – முடிவுரை.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com